அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம்:216

எனது இல. 2/9/361(எச்) 1V
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7

1983, பெப்ரவரி மாதம் 28 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களை நியமித்தல்
இடமாற்றஞ் செய்தல், சேவையிலிருந்து விலக்குதல்
ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன சார்ந்த தத்துவங்
களைக் கையளித்தல்.

1981.06.30ஆம் திகதியையும் 194-ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 1980-10-16 ஆம் திகதியையும் 180ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்ட தத்துவங்கள் கையளிப்பு அரசாங்க சேவை ஆணைக்குழு மூலமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

02. ஆகவே, 180ஆம் இலக்க சுற்றறிக்கையில் (1), (111) (1V) (ஆ) முதலிய பந்திகளில் காட்டப்பட்ட தத்துவங்கள் கையளிப்பு சரியான முறையில் நடைபெறுவதற்காக 180ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் படி அமைச்சரவை மூலம் கையளிப்பைப் பெற்றுக் கொண்டுள்ள அமைச்சர்கள் அனைவரும் அந்தச் சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட தினமான 1980-05-21ஆம் திகதி தொடக்கம் செயற்படும்வகையில் அமைச்சரவையிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் அதே தத்துவங்களை புதிதாகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

03. 180ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் (1V) (அ) பந்தியும் 194ஆம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 180ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் (1V) (இ) பந்தியில் காட்டப்பட்ட தத்துவங்கள் கையளிப்பு 1980-05-21 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு, அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் கையளிக்கப்பட்டதால் ஏலவே திருத்தப்பட்டுவிட்டது.

04. இடமாற்றம் தொடர்பாக 1979-04-19ஆம் திகதியையும் 137 ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்று நிருபமும் 180ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தின் (11)ஆம் பந்தியும் இனி செல்லுபடியாகாது. 1978-10-18ஆம் திகதியையும் 130ஆம் இலக்கத்தையும் கொண்ட சுற்றறிக்கையின் 2:11:2ஆம் பந்தியில் குறிப்பிட்ட அதிகாரிகளே இடமாற்றஞ் சம்பந்தமான அதிகாரங்களை உடையவர்களாக இருப்பர்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.